1980 பிப்ரவரி 11]

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்பொழுதும் மண்பாண்டத்தில்தான் சமையல் செய்து சாப்பிட்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, அது அவருடைய உடல் வலுவைப் பார்க்கும் போது தெரிகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது மட்டும் அல்ல, அவரே ஒரு மண்பாண்டத் தொழிற்சாலையை மதுராந்தகத்தில் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். (சிரிப்பு).

பட்டு உற்பத்தி நிலையம், பணகுடி.

*வினா எண். 116 —திரு. யா.சை.மு. யூசுப் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லை மாவட்டம், இராதாபுரம் தொகுதியிலுள்ள பணகுடியில் பட்டு உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு செயல் படாது உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) பருவகால மாறுதல் காரணமாக ஏற்பட்ட கடுமையான காற்றின் தாக்குதலால் மணலால் மூடப்பட்டு, பட்டு வளர்ப்புத் தொழில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டதால், ஊரகத் தொழில் திட்டத்தின் கீழ் பணகுடி கிராமத்தில் 1964ல் துவக்கப் பெற்ற செயல் விளக்கப் பட்டுப் பண்ணையை மூடும்படி 1973ல் அரசு ஆணை பிறப்பித்தது.

திரு. யா.சை.மு. யூசுப் : பணகுடியில் உருவாகிய அந்தப் பட்டு குற்றாலம் மற்றும் இதர பகுதிகளில் உருவாகிய பட்டைவிட தரம் மிகுந்ததாகக் கருதப்பட்டபோதிலும் பருவமழை என்று கருதாமல் தொடர்ந்து அந்த இடம் தூசிபடிகிற இடமாக இருக்கிறது என்று தெரிந்தும் தவறான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டதால், கட்டடங்கள் பழுதடைந்து, கிணறுகள் மூடப்பட்டு திட்டம் பாழ்பட்டு விட்டது என்ற காரணத்தால், அங்குள்ள சீதோஷ்ண நிலையைக் கருதியும் வேறு ஒரு இடத்தில் அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க இந்த அரசு முன்வருமா ?

[1980 பிப்ரவரி 11

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்தத் திட்டம் ஏன் கைவிடப்பட்டது என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அங்குள்ள சீதோஷ்ண நிலை பட்டு வளர்ப்புக்கு ஏற்றதாக இல்லை. ஆரம்ப காலத்தில் மிகச் சிறந்த பட்டு அங்கே தயாரிக்கப்பட்டு வந்தது. அங்கே, மணல் மூடுகிற ஒரு பேராபத்து ஏற்பட்ட காரணத்தால், அந்தப் பகுதியில் உள்ள பண்ணைகள் எல்லாம் மணல் மூடப்பட்டு விட்டன. ஆகவே, அந்தப் பகுதியில் இந்தச் செயல் விளக்கப் பண்ணை ஏற்படுத்த வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் வேறு ஏதாவது ஒரு பகுதி தகுந்த இடமாக இருக்குமானால் அரசு பரிசீலனை செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. யா.சை.மு. யூசுப் : என்னுடைய கேள்வியில் குறிப்பிட்டதைப்போல் அந்தக் கிராமத்தின் சீதோஷ்ண நிலை பட்டு உற்பத்திக்கு நல்லவிதமாக இருந்த போதிலும் அரசாங்கம் தேர்ந்தெடுத்த இடம் மோசமான இடமாயிருக்கிறது. எப்போதும் மணல் வாரியிரைக்கிற பகுதியாக உள்ள ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து பெரிய தவறைச் செய்திருக்கிறார்கள். அதை நிவர்த்தி செய்யும் விதத்தில் அதே கிராமத்தில் பக்கத்தில் இன்னொரு இடத்தில் இந்தத் திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் அந்தக் கிராமத்திலுள்ள வேறு ஒரு பகுதியில் மணல் மூடுகிற பேராபத்து இல்லை என்ற உறுதியிருக்குமானால் நிச்சயமாக இந்தத் திட்டத்தை அங்கே மேற்கொள்ளலாம்.

யானைக்கால் வியாதித் தடுப்பு நடவடிக்கைகள்.

*வினா எண். 117 —திரு. ஆர். மணிமாறன், திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யானைக்கால் வியாதியினால் பெருமளவு மக்கள் பாதிக்கப்படுகிறார்களா ?

(ஆ) தஞ்சை, கோவை போன்ற மாவட்டங்களில் இதற்கென எடுக்கப்படுகிற தடுப்பு நடவடிக்கைகள் என்ன ?

(இ) நோயைக் கண்டறிவதற்கான ஆய்வு முறைகள் என்ன

(ஈ) இதனால் பாதிக்கப்பட்டு கால் மிகப் பெரிதாக வீங்கியவர்களுக்கு மருத்துவத் துறையினரால் தனிப்பட்ட சிகிச்சை முறைகள் கொடுக்கப்படுகின்றனவா ?